சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 04.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **122/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-5 |
| சாட்சியின் பெயர் | : | சுரேஷ் |
| தந்தை பெயர் | : | கனகசபை |
| கிராமம் | : | மணக்கால் அய்யம்பேட்டை |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | ஆசாரி |
| வயது | : | 45 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தச்சர் வேலை செய்து செய்து வருகிறேன். அ.சா.1 செல்வராஜை தெரியும். எங்கள் வீட்டிற்கு எதிர்த்த வீட்டை சேர்ந்தவர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகளையும் தெரியும். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது.

போலீசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு வழக்கு விபரம் பற்றி நேரிடையாக தெரியாது என சொன்னேன்.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**<u>அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி</u>**

கடந்த 04.06.2025 ம் தேதி இரவு 08.00 மணிக்கு நான் வீட்டிற்கு வெளியில் வந்தபோது அ.சா.1ன் மகனான ஆசைத்தம்பியின் கூரை வீடு எரிந்திருந்தது என்றும், அந்த சமயத்தில், 1ம் எதிரி வைத்தியநாதன், அவரது மகன்கள் 2 வது எதிரி வீரமணி, 3 வது எதிரி மாதவன் ஆகியோர்கள் வேகமாக ஆசைத்தம்பி என்பவரின் வீட்டு கொல்லைபுறத்திற்கு நடந்து போனார்கள் என்றும், நானும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் சென்று தீயை அணைத்தோம் என்றும், போலீசார் விசாரணையில் மேற்கண்டவாறு சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.04 15:11:51 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.